தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2022

## வளர்தமிழ் 9

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்
மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. முதலெழுத்துகள்

அ) இருபது ஆ) பதினெட்டு

இ) பன்னிரண்டு ஈ) முப்பது

2. நாம் உலகில் நல்வழியில் வாழ்ந்திட வழிகாட்டும் நூல்

அ) திருக்குறள் ஆ) மணிமேகலை

இ) தொல்காப்பியம் ஈ) சிலப்பதிகாரம்

3. என்னே + அழகு என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) என்னேஅழகு ஆ) என்னேயழகு

இ) என்னேய்யழகு ஈ) என்னழகு

4. தர்மபாலா தனக்குப்பின் தனது ஆட்சியை ________ எழுதிக் கொடுத்தான்.

அ) ஆங்கிலேயருக்கு ஆ) ஒல்லாந்தருக்கு

இ) தமிழருக்கு ஈ) போர்த்துக்கேயருக்கு

5. இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் சொல் உறுப்பு

அ) சந்தி ஆ) சாரியை

இ) பகுதி ஈ) மாற்றம்

6. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய ஆண்டு

அ) 1619 ஆ) 1680

இ) 1618 ஈ) 1610

7. முல்லைத்தீவு முப்புறமும் கடல் சூழ்ந்த மாவட்டம். இதில் சூழ்ந்த என்பது

அ) வினையெச்சம் ☐ ஆ) வினைமுற்று ☐

இ) பெயர்ச்சொல் ☐ ஈ) பெயரெச்சம் ☐

8. மண்ணை உழுவதற்குப் பயன்படும் கருவி

அ) கலப்பை ☐ ஆ) மண்வெட்டி ☐

இ) கோடரி ☐ ஈ) கடப்பாரை ☐

9. எழிலன் அங்காடியில் இனிப்பு வாங்கினான். இதில் இடம்பெற்றிருக்கும் ஆகுபெயர்

அ) பொருளாகுபெயர் ☐ ஆ) இடவாகுபெயர் ☐

இ) குணவாகுபெயர் ☐ ஈ) தொழிலாகுபெயர் ☐

10. கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்... என்ற பாடலைப் பாடியவர்

அ) புகழேந்தி ☐ ஆ) மோசிகீரனார் ☐

இ) சேக்கிழார் ☐ ஈ) கம்பர் ☐

11. கலங்கரை விளக்கம் போல என்பது

அ) இணைமொழி ☐ ஆ) அடுக்குத்தொடர் ☐

இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ) உவமைத்தொடர் ☐

12. கோழி மிதித்துக் குஞ்சு சாகுமா? என்ற பழமொழியின் கருத்து

அ) வீண்பெருமை ☐ ஆ) தாய்மையின் கவனம் ☐

இ) முன்னேற்பாடு ☐ ஈ) எல்லை கடத்தல் ☐

13. ஒரு செயலை உணர்த்துவது

அ) திரிசொல் ☐ ஆ) வினைச்சொல் ☐

இ) பெயர்ச்சொல் ☐ ஈ) இடைச்சொல் ☐

14. இலங்கை சிறீலங்கா எனப் பெயர் மாற்றப்பட்ட நூற்றாண்டு

அ) 18 ஆம் நூற்றாண்டு ☐ ஆ) 15 ஆம் நூற்றாண்டு ☐

இ) 19 ஆம் நூற்றாண்டு ☐ ஈ) 20 ஆம் நூற்றாண்டு ☐

15. உறங்கினர் என்பது

அ) பலர்பால் ☐ ஆ) ஆண்பால் ☐

இ) ஒன்றன்பால் ☐ ஈ) பலவின்பால் ☐

16. 1974 இல் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற இடம்

அ) பாரிசு ☐ ஆ) மலேசியா ☐

இ) யாழ்ப்பாணம் ☐ ஈ) தமிழ்நாடு ☐

17. ஏச்சுப்பேச்சு என்பதன் பொருள்

அ) அக்கறை ☐ ஆ) பெருமை ☐

இ) வசைமொழி ☐ ஈ) எல்லை ☐

18. தேர், யானை, குதிரை, காலாள் என்பன

அ) நானிலம் ☐ ஆ) நாற்றிசை ☐

இ) நாற்படை ☐ ஈ) நாற்குணம் ☐

19. ஏழாம் வேற்றுமையின் உருபு

அ) இன் ☐ ஆ) அது ☐

இ) கண் ☐ ஈ) ஆல் ☐

20. "மன்னா என்னை மன்னித்துவிடுங்கள். அறிவு கெட்டுப்போய் மாற்றானுக்குத் துணை நின்றுவிட்டேன்." எனக் கூறியவர்

அ) கயிலைவன்னியன் ☐ ஆ) சங்கிலியன் ☐

இ) வருணகுலம் ☐ ஈ) காக்கைவன்னியன் ☐

21. குறிப்பு வினைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பெரியன் ☐ ஆ) வந்தனன் ☐

இ) குடித்தன ☐ ஈ) ஓடியது ☐

22. பின்வருவனவற்றுள் தமிழ்ச்சொல் அல்லாதது

அ) இருக்கை ☐ ஆ) கோப்பை ☐

இ) சாளரம் ☐ ஈ) பாக்குவெட்டி ☐

23. திருக்குறளைப் பிறமொழியாளரும் புகழ்ந்து போற்றுகின்றனர்.

இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு

அ) கு ☐ ஆ) இல் ☐

இ) ஐ ☐ ஈ) ஓடு ☐

24. புறவினாவிற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) அவள் ☐ ஆ) நீயோ ☐

இ) யார் ☐ ஈ) ஏன் ☐

25. இறந்தகால வினையெச்சம்

அ) கொடுத்தான் ☐ ஆ) கொடுத்த ☐

இ) கொடுத்து ☐ ஈ) கொடு ☐

26. கொறித்தது என்பது

அ) எச்சவினை ☐ ஆ) குறிப்புவினை ☐

இ) தெரிநிலைவினை ☐ ஈ) எதிர்மறைவினை ☐

27. இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டின் வழிவந்த நாகரிகமுள்ள மக்கள்

அ) சிங்களவர், தமிழர் ☐ ஆ) ஆரியர், சிங்களவர் ☐

இ) ஐரோப்பியர்,ஆரியர் ☐ ஈ) இயக்கர், நாகர் ☐

28. அர்,ஆர்,ஓர் என்பன

அ) விகுதிகள் ☐ ஆ) சாரியைகள் ☐

இ) வேற்றுமைகள் ☐ ஈ) பகுதிகள் ☐

29. இலங்கையில் புத்தருடைய காலத்திற்கு முன்பே வடபகுதி __________ எனப் புகழ் பெற்றிருந்தது.

அ) பொம்பரிப்பு ☐ ஆ) நயினாதீவு ☐

இ) கல்யாணி ☐ ஈ) நாகதீபம் ☐

30. புடலங்காய் என்ற பேச்சு வழக்குச் சொல்லை செவ்வழக்காக மாற்றினால்

அ) புடோலங்காய் ☐ ஆ) புடோலக்காய் ☐

இ) புடலாங்காய் ☐ ஈ) புடைலைக்காய் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

“தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு” என்று தமிழரை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர். வேறு எந்த இனத்திற்கும் மொழிக்கும் இல்லாத பெருமை தமிழருக்கும் தமிழுக்கும் உண்டு. ஏனென்றால் மாந்த இனம் எப்படி வாழ வேண்டும் என்பதனை விட எப்படி வாழக் கூடாது என்ற வாழ்வியலை கற்றுக் கொடுத்தது தமிழரின் பண்பாடு. இது இன்றும் உலகம் முழுவதிலும் தடம் பதித்து இருக்கிறது. தமிழரின் பண்பாடு உயர்வான எண்ணங்களை விதைத்துச் சென்றிருக்கிறது. பண்பட்ட மண்ணில் செடிகளும் கொடிகளும் துளிர்விடும். அதுபோல இந்தக் குமுகம் பண்பட வேண்டும் என்றால் நல்ல பண்பாடு இருக்க வேண்டும் என்பதனை தமிழினம் உலகிற்குக் கற்றுக் கொடுத்து இருக்கிறது. நாடாண்ட மன்னன் முதல் குடிசையில் வாழும் மக்கள் வரை பண்பாட்டைக் கட்டிக்காத்துப் பார் போற்ற வாழ்ந்த இனம் தமிழினம். தமிழரின் பண்பாடு, வரலாற்று இலக்கியங்களில் இருந்து இன்றைய இணையம் வரைக்கும் தன்னைக் காட்சிப்படுத்தி நிற்கிறது. நாகரிகம் என்ற பெயரில் தலைமுறை கடந்து விட்டாலும் தமிழரின் பண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலில் பின் தொடர்ந்து வருகிறது.

1. தமிழரின் பண்பாடு எவற்றை விதைத்துச் சென்றிருக்கிறது?

_______________________________________________

_______________________________________________

2. பண்பட்ட மண்ணில் எவை துளிர்விடும்?

_______________________________________________

3. பண்பாட்டைக் கட்டிக்காத்துப் பார் போற்ற வாழ்ந்த இனம் எது?

_______________________________________________

4. தமிழரின் பண்பாடு எப்போது இருந்து தன்னைக் காட்சிப்படுத்தி நிற்கிறது?

_______________________________________________

_______________________________________________

5. எவ்வாறு தமிழரை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர்?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. பறவைகளைத் தூது விடுவதன் மூலம் தன்நிலையை யாருக்கு அறிவிக்கலாம் எனச் சத்திமுற்றப்புலவர் எண்ணினார்?

______________________________________________

2. இலங்கைத்தீவில் போர்த்துக்கேயரைக் கவர்ந்த கமழ்வுப் பொருட்கள் இரண்டு தருக.

______________________________________________

3. **குறள்:**

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் இக்குறளின் பொருளைத் தருக.

______________________________________________

______________________________________________

4. சங்கிலியன் யாரை எதிர்த்துப் போராடினான்?

______________________________________________

5. நாரையின் அலகிற்கு புலவர் கையாண்ட உவமானம் எது?

______________________________________________

6. தனிநாயகம் அடிகளார் தமிழின் பெருமைபற்றி ஓராண்டில் இருநூறு விரிவுரைகளை ஆற்றிய நாடு எது?

______________________________________________

7. சங்கிலியனிடம் நட்பு நாடி வந்தவர் யார்?

______________________________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

# தொழிற்பாட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| பிளக்கிறான் | உடைக்கிறான் | ஒருவன் | பாடல் | நிலமும் |

நெல்லை ஒருவன் விதைக்கிறான்
    நிறையச் சோறு படைக்கிறான்
கல்லை ஒருவன் ____________________
    கட்டி வீடு முடிக்கிறான்

பேனை ஒருவன் பிடிக்கிறான்
    பிஞ்சுப் ____________________ தொடுக்கிறான்
வானை ஒருவன் அளக்கிறான்
    அணுவைக் கூடப் ____________________

வீணை ஒருத்தி எடுக்கிறாள்
    வியக்கும் இசையை வடிக்கிறாள்
தோணி ____________________ வலிக்கிறான்
    தொடர்ந்து மீனாய் இழுக்கிறான்

ஆலை ஒருவன் கட்டுகிறான்
    அதனாற் பயன்கள் காட்டுகிறான்
பாலை ____________________ இவராலே
    பசுமை பெற்று நிற்கிறதே

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் சொற்களின் எதிர்ப்பொருளைத் தருக.

தொடக்கம் ______________________

கோடை ______________________

மேடு ______________________

2. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

பகுசொல் ______________________

அடுக்குத்தொடர் ______________________

உயிர்முன்மெய் புணர்தல் ______________________

3. அழை என்ற வினையடியைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.

| | தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|---|
| அழை | ________ | ________ | ________ |

4. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழி இடம்பெறுமாறு இரண்டு சொல்லியங்கள் எழுதுக.

______________________________________________

______________________________________________

5. பின்வரும் எச்சங்கள் எவ்வகை என இனங்கண்டு எழுதுக.

அழுத ______________________

புகழ்ந்து ______________________

எழுதி ______________________

புள்ளிகள் 15

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. நாங்கள் நல்லவராக ______________ எங்களை எல்லோரும் பாராட்டுவர்.

   ( வாள்ந்தால், வாழ்ந்தால் )

2. ஆத்தொழிலைப் ______________ போற்றினர்.

   ( பண்டைத்தமிழர், பன்டைத்தமிழர் )

3. காளமேகப்புலவர் வசைபாடுவதில் ______________ .

   ( வல்லவர், வள்ளவர் )

4. ஒவ்வொரு நாடும் உள்ளூர் ______________ ஈடுபடுகின்றன.

   ( உற்பத்தியில், உர்பத்தியில் )

5. தேவநேயப்பாவாணர் தமிழின் ______________ உலகுக்கு உணர்த்தினார்.

   ( தணித்தன்மையை, தனித்தன்மையை )

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ போர்த்துக்கேயர் இலங்கையில் வேரூன்றிய வரலாறு
- ✸ மீண்டும் தொடங்கும் மிடுக்கு
- ✸ நானும் எனது பெற்றோரும்
- ✸ இயற்கையும் நாமும்
    - ➢ இயற்கை என்றால் என்ன?
    - ➢ இயற்கையினால் எமக்குக் கிடைக்கும் நன்மைகள் ( ஆறு, கடல், மலை, காடு, மரங்கள் )
    - ➢ நாம் ஏன் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்?
    - ➢ இயற்கையைப் பாதுகாக்காவிடில் ஏற்படும் தீமைகள்

புள்ளிகள் 20